**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 556/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | மோகன்குமார் |
| Father Name | : | குப்புசாமி |
| Village | : | அண்ணாநகர், கம்பளியாம்பட்டி |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 26 |

Accused absent. 355 BNSS petititon filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.07.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கம்பளியாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன குப்புசாமி எனது அப்பா ஆவார். கடந்த 01.08.2025 ஆம் தேதியன்று இரவு 7.15 மணியளவில் நானும், சித்தப்பா நந்தகுமாரும் தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு செல்லவேண்டி இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எல்லப்பாறை பேருந்து நிறுத்தம் அருகில் கூட்டமாக இருந்தது. அங்கு சென்று பார்த்தபோது நான் வருவதற்கு முன்பாக எனது அப்பா அவரது இருசக்கர வாகனமான டிவிஎஸ் 50 யில் தோட்டத்தில் இருந்து கிளம்பி சென்றபோது இருசக்கரவாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கு இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். எனது உறவினர்கள் காரில் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக திருப்பூர் ஆதார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். பின்னர் தொடர் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையில் சேர்த்தோம். அங்கு சிக்சையில் இருந்தவர் இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எனது அப்பாவின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரிலும், போலீசார் விசாரணையிலும் 01.08.2025 ஆம் தேதி இரவு எனது தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு நானும், எனது சித்தப்பாவும் இருசக்கர வாகனத்தில் ஒன்றாக சென்றுகொண்டிருந்தபோது எனது அப்பா குப்புச்சாமி அவருக்கு சொந்தமான TN 47 A 0632 என்ற டிவிஎஸ் 50 யில் வீட்டிற்கு செல்லும்போது எனது அப்பாவின் இருசக்கர வாகனம் பெட்ரோல் இல்லாமல் நின்றுவிட்டதால் காங்கேயம் - கம்பளியாம்பட்டி ரோட்டில் எல்லப்பாளை பஸ் ஸ்டாப் அருகில் தள்ளி சென்றுகொண்டிருந்தபோது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த TN 78 6714 என்ற ஹீரோ ஹோண்டா பிரோ இருசக்கர வாகனத்தை கோபிநாத் என்பவர் சந்தோஷ் குமார் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையும் ஓட்டிச்சென்று எங்களுக்கு முன்னால் இருசக்கர வாகனத்தை தள்ளி சென்றுகொண்டிருந்த எனது அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், சம்வத்தை நானும், எனது சித்தப்பாவும் நேரில் பார்த்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாக கூறிவிட்டு தற்போது எதிரியிடம் இருந்து விபத்து நஷ்ட ஈடு பெற்றுக்கொண்டு அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.17 14:59:27 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 556/2025 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | நந்தக்குமார் |
| Father Name | : | ஆறுமுகம் |
| Village | : | கம்பளியாம்பட்டி |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 33 |

**Accused absent. 355 BNSS petititon filed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.07.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கம்பளியாம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் மகன் ஆவார். விபத்தில் இறந்துபோன குப்புசாமி எனது அண்ணன் ஆவார். கடந்த 01.08.2025 ஆம் தேதியன்று இரவு 7.15 மணியளவில் நானும், எனது அண்ணன் மகன் மோகன்குமாரும் தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு செல்லவேண்டி இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எல்லப்பாறை பேருந்து நிறுத்தம் அருகில் கூட்டமாக இருந்தது. அங்கு சென்று பார்த்தபோது நாங்கள் வருவதற்கு முன்பாக எனது அண்ணன் அவரது இருசக்கர வாகனமான டிவிஎஸ் 50 யில் தோட்டத்தில் இருந்து கிளம்பி சென்றபோது அவரது இருசக்கரவாகனம் பெட்ரோல் இல்லாமல் நின்றுவிட்டதாகவும், மேற்படி ரோட்டில் நடந்து சென்றபோது மேற்படி சாலையில் வந்த இருசக்கரவாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கு இருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். எனது உறவினர்கள் காரில் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக திருப்பூர் ஆதார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். பின்னர் தொடர் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையில் சேர்த்தோம். அங்கு சிக்சையில் இருந்தவர் இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி

இறந்துவிட்டார். எனது அண்ணன் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் 01.08.2025 ஆம் தேதி இரவு எனது தோட்டத்தில் இருந்து வீட்டிற்கு நானும், எனது அண்ணன் மகன் மோகன்குமாரும் இருசக்கர வாகனத்தில் ஒன்றாக சென்றுகொண்டிருந்தபோது எனது அண்ணன் குப்புச்சாமி அவருக்கு சொந்தமான TN 47 A 0632 என்ற டிவிஎஸ் 50 யில் வீட்டிற்கு செல்லும்போது எனது அண்ணன் இருசக்கர வாகனம் பெட்ரோல் இல்லாமல் நின்றுவிட்டதால் காங்கேயம் – கம்பளியாம்பட்டி ரோட்டில் எல்லப்பாளை பஸ் ஸ்டாப் அருகில் தள்ளி சென்றுகொண்டிருந்தபோது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் வந்த TN 78 6714 என்ற ஹீரோ ஹோண்டா பிரோ இருசக்கர வாகனத்தை கோபிநாத் என்பவர் சந்தோஷ் குமார் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையும் ஓட்டிச்சென்று எங்களுக்கு முன்னால் இருசக்கர வாகனத்தை தள்ளி சென்றுகொண்டிருந்த எனது அண்ணன் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், சம்வத்தை நானும், எனது அண்ணன் மகனும் நேரில் பார்த்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாக கூறிவிட்டு தற்போது எதிரியிடம் இருந்து விபத்து நஷ்ட ஈடு பெற்றுக்கொண்டதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.17 14:59:35 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்